(6 pages)

**Reg. No. : .......................................**

**Code No. : 10547** **Sub. Code : CMTA 52**

B.A. (CBCS) DEGREE EXAMINATION,
NOVEMBER 2023.

Fifth Semester

Tamil — Core

சங்க இலக்கியம்

(For those who joined in July 2021-2022)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. கடியலூர் உருத்திரங்கண்ணனார் ஆற்றுப்படுத்தும் நபர்
   (அ) கூத்தர் (ஆ) பாணர்
   (இ) பொருநர் (ஈ) விறலியர்

2. நெய்யை விற்ற பின் பண்டமாற்றாகப் பெறும் பொருள்
   (அ) பணம் (ஆ) எருமை
   (இ) தேன் (ஈ) கள்

3. பூ விற்கும் தலைவி, யாரின் மகள்?
   (அ) கானவன்
   (ஆ) மலைவாழ்நன்
   (இ) தண்டலை உழவன்
   (ஈ) மலையன்

4. பிடியின் பசித்துயர் போக்கும் மரம்
   (அ) யா
   (ஆ) மூங்கில்
   (இ) வேம்பு
   (ஈ) வேங்கை

5. 'உண்ணுநீர் விக்கினான்' என்றுரைத்தது யார்?
   (அ) தலைவன் (ஆ) தோழன்
   (இ) தலைவி (ஈ) தோழி

6. 'கழார்' ஊரின் மன்னன்
   (அ) மத்தி (ஆ) அத்தி
   (இ) கட்டி (ஈ) தித்தன்

7. ஒன்பதாம் பத்தின் பாட்டுடைத் தலைவன்
   (அ) பெருஞ்சேரல் (ஆ) செங்குட்டுவன்
   (இ) நெடுஞ்சேரல் (ஈ) இளஞ்சேரல்



Nesamony Memorial Christian College, Marthandam

8. 'நின்தலை வந்த இருவரை நினைப்பின்,

தொன்று உறை துப்பின் நின் பகைஞரும் அல்லர்' - என்றவர்

(அ) கோப்பெருஞ்சோழன்

(ஆ) எயிற்றியனார்

(இ) மருதனார்

(ஈ) மாங்குடிக்கிழார்

9. துலாக்கோல்தட்டில் ஒருபுறம் உலக நகரங்களை நிறுத்திட, மறுபுறத்தட்டில் வைப்பது

(அ) வையை

(ஆ) திருமாலிருஞ்சோலை

(இ) காவிரிப்பூம்பட்டினம்

(ஈ) மதுரை

10. தாமரையின் அக இதழ்களைப் போன்று காட்சியளிப்பது

(அ) திருமாலின் முகம்

(ஆ) திருமாலின் கண்கள்

(இ) மதுரை நகர்த் தெரு

(ஈ) தொண்டி நகரம்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

11. (அ) உமணரின் கூட்டுப்பயணத்தை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பெரும்பாணன் திரையனைப் போற்றிய திறத்தைப் புலப்படுத்துக.



12. (அ) விறலியின் அழகை நற்றிணைத் தலைவியின் துணைகொண்டு விளக்குக.

(அல்லது)

(ஆ) தாமோதரனாரின் குறுந்தொகைப் பாடற்கருத்தை வெளிப்படுத்துக.

13. (அ) 'சுடர்த்தொடி ! கேளாய் !' எனத் தலைவி விளித்துக் கூறியது என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) தலைமகனுக்குத் தோழி வாயில் மறுத்தது ஏன்? விவரிக்க.

14. (அ) இளஞ்சேரல் இளம்பொறையின் முன்னோர் கொடைச் சிறப்பை வெளிப்படுத்துக.

(அல்லது)

(ஆ) வல்லாண்முல்லை - பாடற்கருத்தை ஆலூர்க்கிழாரின்வழித் தொகுக்க.

15. (அ) 'மாயோன் கொப்பூழ் மலர்ந்த' பாடலை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'மதுரையும் தமிழும்' குறித்து எழுதுக.



*Nesamony Memorial Christian College, Marthandam*

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

16. (அ) 'தொண்டைமான் இளந்திரையன் என்னும் கொடைஞன்' - நிறுவுக.

(அல்லது)

(ஆ) பெரும்பாணாற்றுப்படை காட்டும் பல்வகைக் குடியிருப்புகளை விளக்குக.

17. (அ) நற்றிணைப் பாடல்களின் உவமை நயத்தைச் சான்றுடன் தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) சங்க இலக்கியத்தில் குறுந்தொகை பெற்றுள்ள சிறப்பிடத்தை ஆராய்க.

18. (அ) இடையர்களின் வீரவாழ்க்கையை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) அகநானூற்றுத் தலைவியரின் பிரிவுக் காலத் துயரை வெளிப்படுத்துக.

19. (அ) முற்காலச் சேரவேந்தர்களின் சிறப்புகளைப் பதிற்றுப்பத்தினால் நிறுவுக.

(அல்லது)

(ஆ) புறநானூற்றின் வாயிலாகக் காணலாகும் பழந்தமிழ் வேந்தர்களின் வரலாற்றைத் தொகுத்துரைக்க.



20. (அ) பரிபாடல் அக இலக்கியமா? புற இலக்கியமா? அகப்புற இலக்கியமா? ஆய்க.

(அல்லது)

(ஆ) பரிபாடலால் அறியப்படும் மதுரைநகர்ச் சிறப்புகளைப் புலப்படுத்துக.

---



Nesamony Memorial Christian College, Marthandam